TEENAGE

காதலுக்கு தடைபோடும் பெற்றோர்

மிலாமிலா



பல்சுவை மாத மஞ்சரி
நவம்பர் 1994
ரூ. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானவில்லின்
ஜாலங்கள்
சல்வார்களாகும்
புதுமை!
அழகில் தெரிவதே
மேலும்
இளமை!

தலைநகரில்
சேலைகளின்
இராஜ்ஜியம்!

SAREE KINGDOM

NO. 05,GALLE ROAD,
(OPPOSITE SAVOY)
COLOMBO - 06.

இன்று வளைகுடாவில் குவெய்த்தின் பெட்ரோலுக்காக உலக நாடுகள் அடித்துக் கொள்கின்றன! இதற்கெல்லாம் மூலகாரணம், அங்கே பெட்ரோல் இருப்பதைக் கண்டுபிடித்ததால்தான்! அதுவும் வளைகுடா நாட்டு ஆசாமி யாரும் அதைக் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடித்தவர் பிராங்க் ஹோம்ஸ் என்ற நியூசிலாந்துக்காரர்!

நியூசிலாந்தில் அந்த நாட்டு அரசுக்காகப் பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் இன்ஜினியர் ஒருவருக்கு மகனாய்ப் பிறந்தவர் பிராங்க் ஹோம்ஸ் (25.11.1874). முதலாம் உலகப்போரில் பிரிட்டிஷ் ரோயல் நேவியில் மிகத் திறமையாய் இவர் செயல்பட்டதை மெச்சி பிரிட்டிஷ் படைகளின் உணவுக்காகச் சிறந்த மாமிசத்தைத் தேர்வு செய்து வாங்கும் உயர் சப்ளை ஆபீசராய் பதவி உயர்த்தப்பட்டார் ஹோம்ஸ்.

தனது புதிய பணியில் ஈராக்கிற்குச் சென்ற ஹோம்ஸ் அங்கே மணலில் திட்டுத் திட்டாய் பெட்ரோல் கசிந்து படிந்திருப்பதைக் கண்டு மணலுக்கு அடியில் பெட்ரோல் இருக்க வேண்டும் என்று ஊகித்தறிந்தார். இதை அவர் சொன்னபோது எவரும் நம்பத் தயாராய் இல்லை. சவுதி அரேபிய மன்னருக்கு விருந்துகள் பல கொடுத்து அவர் நன்மதிப்பைப் பெற்று பெட்ரோல் தோண்டும் உரிமையைப் பெற்றும் பிரிட்டிஷ் கம்பெனிகள் அவர் காலை வாரி விட்டன.

இறுதியில் அமெரிக்காவிடமும் கல்ஃப் ஒயில், ஸ்டாண்டர்டு ஒயில், டெக்ஸாஸ் ஒயில் என்ற மூன்று கம்பெனிகளிடமும் தனது கண்டுபிடிப்பைச் சொல்ல, அந்த மூன்று கம்பெனிகளும் சேர்ந்து பஹ்ரைன் ஒயில் கம்பெனியை ஆரம்பித்தன. 1932-ல் பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டது. 1936-முதல் ஆண்டுக்கு 6,20,000 டன் பெட்ரோலை உற்பத்தி செய்தது. அப்படியும் பிரச்னை தீர்ந்தபாடில்லை.

பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று அங்கே கண்டுபிடிக்கப்பட்ட பெட்ரோலைச் சொந்தம் கொண்டாடியது. ஹோம்ஸ் அதனுடன் போராடி, பின்பு சமாதானமாகி, அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுறவில் குவெய்த் ஒயில் கம்பெனி நிறுவப்பட்டது. ஹோம்ஸ் 1947-ல் இறந்தபோது அவருக்கு வயது 73. ஹோம்ஸ் இன்று இருந்திருந்தால் சமாதான முயற்சியை அவரே மேற்கொண்டிருப்பார் என்று நம்பலாம்!

–நளினி

உலகின் இரண்டாவதுமிகப்பெரிய கண்டம் ஆபிரிக்கா. இது புவியின் பரப்பளவில் 20% த்தை வகிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தென்றல்!

வ.முரளீதரன்

ஆண்டுகள் பல இனவாதத்தில்
கடந்ததனால்
மாண்டுபோயின உயிர்கள் ஆயிரம்.
சமர்தான் சாதகம் என்றன்று
இருந்ததனால்
சங்கமித்தனவே சந்ததிகள்
போர்க்களத்தில்!

பிற்றுமையின் நிழல்தேடி
ஏங்கிருந்த தேசத்திற்காய்
பல்கட்சி இணைவதனால் பாங்காய்
ஆட்சிபற்றி பறைசாற்றல்
போக்கியிங்கு நாட்டின் நலனுக்காய்
சமாதானம் தந்த சந்திரிக்காவே!

அமைதியதை சிறையிலிட்டு
இனவாத பூட்டிட்டு
அடைக்கப்பட்ட மனித சுதந்திரத்தை
உரிமையுடன் நாம் பெற்று
உலவிடவே
உதித்திட்ட புது உயர் நிலவே!

படுகொலையின் பயங்கரத்தை
நீயுணர்ந்ததனாலே
உயிர்தனின் உயர்வறிந்து
போர்க்கோடியிருக்க வெண்கொடி
பிடித்திருக்கும்
வெண்சமாதான புறாவே
நின் வரவின் காரணத்தால்
தலைநிமிர்ந்ததமைதி!

உலகின் இரண்டாவது மிகப்பெரிய சமுத்திரம் அத்திலாந்திக் சமுத்திரம்.பரப்பளவு 9,43,14,000 ச. கிலோமீட்டர்கள்.

அலெக்ஸாண்டர் பிறந்தவுடன் அவர் தந்தை பிலிப் அரிஸ்டாட்டிலுக்கு கீழ்கண்டவாறு கடிதம் எழுதினார்.
'..... எனக்கு மகன் பிறந்திருக்கின்றான் என்ற மகிழ்ச்சியைக் காட்டிலும் அவன் தங்களைப்போன்ற அறிஞர்கள் காலத்தில் பிறந்திருக்கிறான் என்பதே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.!'

எலேன் சர்ச்

உலகின் முதல் விமானப் பணிப்பெண்

செல்வி எலேன் சர்ச். இவர்தான் உலகில் விமானப் பயணிகளுக்கு பணிப்பெண்ணாக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி. அமெரிக்காவில் தாதியாக தொழில் புரிந்து வந்த இவர் சிறந்த பைலட்டும் கூட 'தேர்ச்சிபெற்ற இளம்பெண்களை 'விமானப்பணிப் பெண்களாக வேலைக்கமர்த்தினால் நன்றாக இருக்குமே!' என யோசனை தெரிவித்து அமெரிக்க விமானக்கம்பனிக்கு கடிதமொன்றை எழுதினார் எலேன் சர்ச். இவரது கடிதத்தை ஏற்றுக்கொண்ட நிறுவனத்தினர் இவரை கம்பனியின் முதல் விமானப்பணிப்பெண்ணாக நியமித்தனர் 1930 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி யுனைடெட் ஏர்லைனஸ் விமானத்தின் 11 பயணிகளை முதன்முதலாக இவரும் இவரது ஏழு சக பணிப்பெண்களும் இன்முகத்தோடு வரவேற்றார்கள். இவர்களுக்கு மாதச்சம்பளமாக 125 டொலர் அப்போது வழங்கப்பட்டது.

மேற்கு பசுபிக்கிலுள்ள நியூ கினி தீவுதான் உலகின் இரண்டாவது மிகப் பெரிய தீவாகும். பரப்பளவு 7,89,900 ச.கி.மீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை எண்ணங்களுக்கு விடைகொடுப்போம்!

ஹாரி ஹௌடினி(HARRY HOUDINI) இவர் அமெரிக்காவில் மட்டுமல்ல உலகிலேயே மிகச்சிறந்த தந்திர வித்தைக்காரர், என புகழப்பட்டவர். எத்தகைய கடினமான பூட்டினையும் இலகுவில் திறக்கக்கூடிய ஆற்றல் இவரிடம் இருந்தது. சிறைக்குள்ளே அடைத்து வைத்தால் சிறிது நேரத்தில் கதவைத் திறந்துக்கொண்டு வெளியே வந்து சிரித்துக் கொண்டிருப்பார். உலகம் முழுவதும் உள்ள காவல் துறையினர் இவரது திறமையைக்கண்டு அதிசயித்துப் போயிருந்தனர்.

இப்படி எல்லா வகையான பூட்டுக்களுக்கும் 'பாச்சா' காட்டிக் கொண்டிருந்த ஹௌடினியை இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு சிறையதிகாரி தன்னுடன் சவாலுக்கு வருமாறு அழைத்தார். 'பூட்டப்பட்ட சிறைக்கதவை ஹௌடினி திறக்க வேண்டும்' இதுதான் சவால். அமெரிக்காவிலே மிகப் பெரிய சிறைகளை இலகுவாக திறந்த ஹௌடினிக்கு இந்த சிறிய சிறைச்சாலையின் கதவைத்திறப்பது பெரிய காரியமா என்ன? ஹௌடினியும் சவாலை ஏற்றுக்கொண்டார்.

பந்தய தினம் வந்தது. எளிதாகத் திறந்துவிடலாம் என்று நினைத்த கதவை ஹௌடினியால் திறக்கமுடியவில்லை. முப்பதே செக்கன்களில் திறந்துவிடும் ஹௌடினி மூன்று மணிநேரம் போராடினார். ஆனால் அந்த பூட்டினை மட்டும் திறக்க முடியவில்லை. உடல் முழுவதும் வியர்வை ஆறாக ஓடியது. இனியும் முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டார் ஹௌடினி. களைப்பு மேலிட அப்படியே சிறைக்கதவில் சாய்ந்தார். என்ன ஆச்சரியம்! கதவு திறந்து கொண்டது!

உண்மையில் அந்தக் கதவு பூட்டப்படவேயில்லை.!

இது போலத்தான் நமது வாழ்க்கையும். இல்லாதனவற்றை இருக்கின்றதென எண்ணி நமது மனதை நாமே குழப்பிக் கொள்கின்றோம். சோம்பல், பயம், வீண் சந்தேகங்கள், இவையெல்லாம் நமது மனதின் மேல்தளத்தில் நமக்கு நாமே ஏற்படுத்தி வைத்துள்ள வெறும் கற்பனை எண்ணங்கள். இந்த எண்ணங்கள் நமது மனதைக் குழப்பி தோல்விக்கு அடி கோலுகின்றன.

சாதாரண மனிதர்களாக இருந்தவர்கள் தான் சாதனையாளர்களாக மாறியிருக் கின்றார்கள். அவர்களுக்கு எப்படி முடிந்தது? அவர்களுடைய மனதில் மேற்கூறிய கற்பனை எண்ணங்களுக்கு இடமேயிருந்ததில்லை. 'என்னால் முடியும். முயற்சி செய்வேன். வெற்றி பெறுவேன்', இந்த எண்ணங்கள் தான் ஒவ்வொரு மனிதரதும் உள்ளத்தின் அடித்தளத்தில் நிலையாக உறங் கிக்கிடக்கின்றன. சாதனையாளர்கள் அவற்றைத் தட்டிவிட்டார்கள்! வெற்றி பெற்றார்கள்! நமது மனதிலே நிலையாக உறங்கிக்கிடக்கும் அத்தகைய எண்ணங் களை தட்டிவிட முயற்சிப்போம்! நாமும் சாதனையாளர் வரிசையில் இடம் பிடிப்போம்!

புகழைப் பொருட்படுத்தாதீர்கள். ஆனால், புகழ் பெறுவதற்குத் தகுதியுடையவராக உங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

– கன்பூசியஸ்

பிரேஸிலினூடாக ஓடும் அமேசன் நதிதான் உலகின் இரண்டாவது மிக நீண்ட நதி. நீளம் 6,448 கி. மீட்டர்கள்

உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஏரி கனேடிய அமெரிக்க எல்லை யிலுள்ள சுப்பீரியர் ஏரி. பரப்பளவு 82,350 ச.கி.மீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஊஹூம் இனிமேலும் என்னால் இருக்க முடியாது.' சிவா யோசித்தான். உடனே பளிச்! பரபரவென எழுதத்துவங்கினான் அரைநாள் விடுப்புக்கடிதம்.

'முடிந்தது... லஞ்ச் டைம் வரையும் உட்கார்ந்து இருக்க வேண்டுமே...' என்று நினைத்த சிவாவின் கண்கள் பதிந்தது சுவரில் தொங்கிய கலண்டர் மீது.

14 மே 1994

ஆம், இன்று அவனது திருமணநாள். வசந்தியை கைப்பிடித்து இன்றுடன் ஒரு வருடமாகிறது.

ட்ரீ.... ங்.... ட்ரீ....ங்

அவருக்குத் தெரிந்தால்..!

பன்னிரண்டு மணி லஞ்ச் பெல் அடித்ததும் கடிதத்தை மனேஜரிடம் கொடுத்துவிட்டு, அவசர அவசரமாக ஓடினான். பரிசுகள் வாங்கிக்கொண்டு திடீரென அவள் முன்னால் போய் நின்று அவளை அதிர்ச்சியடையச் செய்ய வேண்டும்!

இதோ! வீடு வந்துவிட்டது.

கைகளில் ஆசையுடன் வாங்கிவந்த பொருட்கள். வாசற்படியில் மெதுவாக காலைத் தூக்கி வைத்தவனுக்கு அதிர்ச்சி!

உள்ளேயிருந்து மெலிதான சிரிப்புச்சத்தம். தொடர்ந்து..... 'அன்றைக்கு போல எப்பவும் நான் உங்களை விரும்புகிறேன். இது என்றைக்கும் மாறாது கண்ணா.'

'வ... வசந்தியின் குரல்' சிவாவிற்கு இதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

'துரோகி... எத்தனை நாளாய் இந்த நாடகம். என்னை ஏமாற்றி விட்டாய். இரு உன்னை...' சிவா மேசையிலிருந்த கத்தியை எடுத்தான்.

"அவருக்கு இதுவரைக்கும் விசயம் தெரிஞ்சிருக்காது. தெரிஞ்சிருந்தா சும்மா இருக்க மாட்டார்" மீண்டும் வசந்தியின் சிணுங்கல் சிவாவை வெறி கொள்ளச்செய்தது. ஆத்திரத்துடன் அறைக்கதவைத் தள்ளிவிட்டான்.

சடாரென்று கட்டிலில் இருந்து எழும்பிய வசந்தியின் முகத்தில் அதிர்ச்சி. அவள் மார்பில்..... சிவா... சிவாவின் போட்டோ...! 'ஐயோ தவறு செய்து விட்டோமே' சிவா தலை குனிந்து நின்றான். அவனை அறியாமல் கத்தி நழுவியது.

"என்னங்க... உங்களுக்கு ஒரு குட்நியூஸ்" என்று ஆசையுடன் ஓடிவந்த வசந்தியை அவன் எப்படி நிமிர்ந்து பார்ப்பான்?

தென்னாபிரிக்காவிலுள்ள 'டுகேலா'. இதுதான் உலகின் இரண்டாவது உயரமான நீர்வீழ்ச்சி. உயரம் 3110 அடி.

காவலுக்குக் கெட்டிக்காரன்

பிறந்த குழந்தை நிமிடத்திற்கு ஒரு முறை சுவாசிக்கிறது. ஆனால் பதினாறு வயதில் நிமிடத்திற்கு 20 முறை சுவாசிக்கிறது.

எலிகள் எப்போதும் எதையாவது கொறித்துக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவை தங்கள் பற்களை மேலும் வளரவிடாமல் தடுக்கவே இவ்வாறு செய்கின்றன. எலிகள் தங்கள் பற்களை வளரவிட்டால் அவற்றின் பற்கள் 2.5 cm வரை வளர்ந்து அவைகளின் வாயைக் கிழித்துக்கொண்டு மடிந்து விடும்.

அடேயப்பா! என்ன உயரம்! அழகிகளுக்கு நடுவே அட்டகாசமாய் போஸ் கொடுக்கும் இவர்தான் உலகிலேயே உயரமான காவலர். பெயர் கெல்வின். ஆஜானுபகுவான தோற்றத்துடன் விளங்கும் இவரது உயரம் 7அடி 6அங்குலம்! எடையோ 400 இறாத்தல்! உயரத்துக்கும் எடைக்கும் ஏற்றாற் போல மார்பளவு, இடுப்பளவு, புஜம், ஆகியன முறையே 62, 46, 34 இருக்கின்றன. கராத்தேயில் கறுப்புப்பட்டி ஒன்றைப் பெற்றிருக்கும் இந்த சூப்பர் காவலர் அமெரிக்காவின் டல்லாஸ் நகரிலுள்ள இரவு விடுதியொன்றில் பணியாற்றுகின்றார். போக்கிரிகளுக்கு சிம்மசொப்பனமாய் விளங்கும் கெல்வின் அந்த ஏரியாவில் நடமாடுகின்றார். எனத்தெரிந்தாலே துண்டைக்காணோம் துணியைக்காணோம் என ஓடி ஒளிகின்றார்களாம் ரௌடிகள்!

உலகிலுள்ள இரண்டாவது மிகப்பெரிய பாலைவனம் அவுஸ்திரேலிய பாலைவனம். பரப்பளவு 38,30,000 ச.கி.மீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TEENAGE காதலுக்கு துடைபோடும் பெற்றோர்!

அருள் சத்தியநாதன்

இன்றைய பெற்றோர்மாருக்கு இருக்கும் கவலைகள் போதாது என்று புதிதாக பல தலையிடிகள். இன்றைய பெற்றோரின் தாய் தந்தையர் அன்று கவலையில்லாமல் ஆறு மக்களைப் பெற்றுப் போட்டு அதிக செலவும் கவலைகளும் இல்லாமல் அவர்களை வளர்த்து ஆளாக்கினர். பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோர் சொல் தட்டுவதில்லை. அதேசமயம் இளைஞர்களை ஈர்க்கும் கவர்ச்சிச் சக்திகளும் அன்று குறைவு.

அக்காலம் எல்லாம் மலையேறிவிட்டது.

ஆணோ பெண்ணோ 14 வயது தாண்டியதும் பெற்றோர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொள்கின்றனர். படிக்கிற வயதில் என்னென்ன வழிகளில் செல்வார்களோ, யார்யாரோடு சகவாசம் வைத்துக்கொள்வார்களோ, சினிமா, காதல், தெரு அளப்பது என்று படிப்பில் அக்கறை இல்லாமல் வாழ்க்கையைச் சீரழித்து விடுவார்களோ, தம் எதிர்பார்ப்புகளில் எல்லாம் மண் அள்ளிப்போட்டு விடுவார்களோ என்று மனதில் சஞ்சலப்படாத பெற்றோரே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

டீன் ஏஜ் என்பதை விடலைப் பருவம் எனலாம். இளங்கன்றுகள் பயப்படுவதில்லை. பயப்படுவது பெற்றோரின் ஏகபோக உரிமை. அவர்கள் அதிகம் கவலைப்படுவது தம் மகனோ அல்லது மகளோ காதலில் வீழ்ந்து விடுவார்களோ என்பது தான்.

நியாயமான பயம் தான்.

ஏனெனில் உலகின் அத்தனை உயிர்களுமே இயக்கப்படுவது காம சக்தியால்தான். உலகம் தொடர்ந்து இயங்கவும், உயிரின வாழ்க்கை தொடரவும் காம சக்தி அதாவது பல்கிப்பெருகச்செய்யும் சக்தி மிக அவசியம். இச்சக்தி அப்படியே தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கவர்ச்சியாக, சுந்தரமாக, எழிலாக, மனோரம்மியமாக, சௌந்தர்யமாக, இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல காதலாக வெளிப்படுகிறது. ஓர் ஆணில் இந்தச்சக்தி பருவ வயதில் உயிர்ப்புப் பெற்று, மனதாலும் உடலாலும் எதிர்ப்பாலை ஈர்ப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள ஆரம்பிக்கிறது. பெண் பருவம் எய்தியதும் இயற்கை அவளில் சௌந்தரியத்தை அள்ளிச் சொரிகிறது. வண்ண மலராய்ப் பூத்துக் குலுங்க ஆரம்பிக்கிறாள்.

இரு பாலரையும் இயற்கை பால் கவர்ச்சியின் உச்சத்திற்கு இட்டுச்செல்லும் காலத்தில்தான் அவர்களது கல்வியும் உச்சநிலையை நோக்கி செல்ல ஆரம்பிக்கிறது. பிரச்சினை ஏற்படுவதே இதனால்தான்.

எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ள தமது கவனத்தை படிப்பில்

> கெட்ட நண்பனுடன் இருப்பதைவிடத் தனிமையாய் இருப்பதே மேல். தனிமையில் இருப்பதைவிட நல்ல நண்பனுடன் இருப்பதே மேல்.
> —பெருமானார் ஸல் அவர்கள்

முழுமையாக அவர்கள் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதே சமயம், இளம் பெண்கள், சினிமா, டி.வி., சினிமாப்பாடல்கள், கவர்ச்சி சஞ்சிகைகள், ஒரு மாதிரியான அரட்டை, எதிர்வீட்டு அங்கிளின் கடைசி மகள், சுந்தரமான பகற்கனவுகள், வீடியோ, நண்பர்களின் 'வீர' அளப்புகள் என்று முடிவில்லா கவர்ச்சி அழைப்புகள் மறுபுறம்.

இந்தக் கயிறிழுப்பில் பல இளைஞர்களும் யுவதிகளும் வெற்றிகரமாகக் கரையேறி பெற்றோர் வயிற்றில் பால் வார்த்து விடுகிறார்கள். அதேசமயம் மேலும் பலர் இக் கவர்ச்சிகளில் சிக்கி படிப்பையும் நல்ல எதிர்காலத்தையும் பாழ்படுத்திக் கொள்ளவும் செய்கின்றனர்.

படிப்பில் இருக்கும் அக்கறையை திசைதிருப்புவதில் பிரதான காரணியாக இருப்பது இந்தப் பாழாய்ப் போன காதல் தான் என்பது பெற்றோரின் ஏகோபித்த கூற்று. ஏனெனில்,

விடலைப் பருவத்தில் காதலில் ஈடுபடுபவர் தன் முழுக்கவனத்தையும் அதில் செலுத்த ஆரம்பித்து விடுகிறார். காதலுக்கு தடைகள் ஏற்படுமானால் அவற்றைத் தகர்த்து எறியவும் அவர்கள் தயார். அவர்களிடையே ஜுரமாக

உலகின் இரண்டாவது உயரமான மலைச்சிகரம் காஷ்மீர் சீன எல்லை யிலுள்ள K2 (கொட்வின் அஸ்டென்). உயரம் 28,250 அடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபித்து கண்களை மூடிவிடக்கூடிய தன்மை கொண்டது இக்காதல். இவ்வயதுக் காதல் அசுர வேகம் உடையது, காட்டாற்று வெள்ளம் போல. தடைகள் தமது பெற்றோர்களாக இருந்தாலும் தகர்த்து எறிய தயங்காத வேகம். ஆனால் இது உணர்ச்சி பூர்வமானதே தவிர புத்தி பூர்வமானது அல்ல என்பதை இளங்காதலர்கள் உணரவேண்டும்.

பெரிய மற்றும் படித்த குடும்பங்களைப் போலல்லாது, சாதாரண குடும்பங்களில், வாழ்க்கையே போராட்டம். வாய்ப்புகள், வசதிகள், நிச்சயத்தன்மைகள் குறைவு. சுற்றுப்புறச் சூழல் அறிவு சூழ்ந்ததாக இருப்பதில்லை. பெற்றோரின் சிந்தனா சக்தி அல்லது கல்வியறிவு போதுமானதாக இல்லாததால் எதை நம்ப வேண்டும், எங்கே கட்டுப்பாடு விதிக்க வேண்டும், எப்படிக் கையாள வேண்டும் என்பதில் அவர்களுக்கு திட்டம் இருப்பதில்லை.

மகனோ மகளோ படிக்கும் வயதில் காதலிக்கிறார்கள் என்பது தெரிந்ததும், காதலுக்கு தடை போடுவது தான் பெற்றோர் லட்சணம் என்பது போல 'வள்'ளென சீறிவிழுவதும், ஏதோ கொலை விழுந்து விட்டதைப்போல அரற்றுவதும் விடயத்தைத் தீவிரமாக்குமே தவிர அது புத்திபூர்வமான அணுகுமுறையாக இருக்காது. ஏனெனில், முன்னர் பார்த்தது போல காதலிப்பது தவிர்க்க முடியாததும் மிக இயற்கையானதுமான ஒன்று. இந்த உண்மையை பெற்றோர் ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையிலேயே விடயத்தை அணுக முயற்சிக்க வேண்டும்.

இத்தகைய மிதமான அணுகுமுறை, தற்கொலைகளைத் தவிர்க்கும். குடும்பப் பிளவுகளை, குழப்பங்களைக் குறைக்கும். சோடி பொருத்தமானதாக இருக்கும் பட்சத்தில், இருதரப்பு சம்மதத்துடன் சம்மதமும் அளித்து விடலாம். இப்போது ஈடுபாட்டுடன் படிப்பில் கவனம் செலுத்துங்கள், படிப்பு முடிந்து தருணம் வந்ததும் திருமணம் செய்யலாம் என்ற நிபந்தனையுடன். எதிர்ப்பு இல்லை என்றதும் வேகம் குறைந்து, நிதானம் தானாகவே வந்துவிடும். வருடங்கள் உருண்டோடும் போது, அனுபவமும் முதிர்ச்சியும் ஏற்பட்டு, தாம் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்கள் இல்லை என்ற உண்மையை உணர்ந்து விலகி விடவும் வாய்ப்பு உள்ளது.

பள்ளிப்பருவத்தில் காதலிக்காமல் இருப்பது தான் சரி. அதுபுத்திசாலித்தனமும் கூட. ஆனால் அனைவரும் அப்படி இல்லை. 'அப்படி இல்லாதோர்' தொகை இன்று அதிகரித்து வருகிறது. இது இன்றைய நடைமுறை உண்மை. இந்த உண்மைக்குத் தான் இன்று பெற்றோர் முகம் கொடுத்து, எதிர்நீச்சல் போடாமல் வெள்ள வீச்சுடனேயே சென்று பிள்ளைகளைக் கரையேற்ற முயல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஏனெனில், கட்டளையிட்டால் கீழ்ப்பணிய வேண்டும். கீழ்ப்பணிய மாட்டார்கள் எனத்தெரிய வந்தால், கட்டளையிடாமல் இருப்பதுதான் சரி. பதிலாக, மாற்றுவழிகளைக் கையாளலாமே!

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு தேவையானவற்றை எல்லாம் எப்படியாவது ஈடு செய்ய முயல்வது வழக்கம். சரி, கூடவே எப்படி அவை ஈடு செய்யப்பட்டன என்பதையும் அவற்றுக்காக பெற்றோர் மேற்கொண்ட தியாகங்களையும் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். குடும்ப கஷ்டங்களை அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். குடும்பத்தில் அவர்களையும் பங்காளியாக்க வேண்டும். தனது 'பிறெடும் பட்டரும்' எப்படி தனக்கு வருகிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டால், சிறு பிராயத்திலேயே பொறுப்புணர்ச்சியை நடைமுறை ரீதியாக ஊட்டிவிட்டால், காதல் பிரச்சினைகளை எல்லாம் சமாளித்து முன்னுக்கு வரக் கற்றுக் கொண்டு விடுவார்கள்.

மின்சாரத்தால் இயங்கும் சிறிய மோட்டார் சைக்கிள் இது. சர். கிளைவ் சின்கிளேயர் என்னும் பிரிட்டிஷ்காரரின் கண்டுபிடிப்பு இது. பேட்டரியினாலோ அல்லது மின்சாரத்தினாலோ இயங்கும் இந்த மின்சைக்கிள் பதினெட்டு மைல் தூரம் வரை ஓடும். அதற்குப்பிறகு பேட்டரியை சார்ஜ் செய்து கொள்ள வேண்டும். பிரான்ஸ் நாட்டின் நகரங்களில் இந்த மின்சார சைக்கிள் அதிகரித்து விட்டது என்கிறார்கள்.

மன்னை அ. வியாகத் அலி.



ஒருவர் : ஒரு நாள் என் குதிரையிலிருந்து நான் விழுந்தப்போ இது உடனடியா போய் டாக்டரை அழைச்சிட்டு வந்தது.

மற்றவர் : உங்க குதிரை நல்ல புத்திசாலியான குதிரையா இருக்கும் போலிருக்கே?

ஒருவர் : சரியாப்போச்சது! இது கூட்டிக்கிட்டு வந்தது குதிரைக்கு வைத்தியம் பார்க்கிற டாக்டரை!

சனத்தொகையில் கூடிய உலகின் இரண்டாவது நாடு இந்தியா. சனத் தொகை 90 கோடி.

உலகின்/மிக உயரமான இடத்தில் அமைந்திருக்கும் இரண்டாவது நகரம் திபெத்திலுள்ள லாசா. கடல் மட்டத்திலிருந்து 12,001 அடி உயரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி 01

மேலிருந்து கீழ்

1. இந்தப் பிரதமரது வாழ்க்கையில் வேலியே பயிரை மேய்ந்தது எனலாம்.
2. பெற்றோரை தினந்தோறும்.....
3. தூண் தலைகீழாய் உள்ளது.
6. உலகப்புகழ்பெற்ற இந்த மனிதரது மனைவி ஒரு வக்கீல்.
9. வானம், ஆகாயம்
11. ஊடலின் போது மனைவி கணவனிடம் .... வேண்டாம் எனக் கூறுவதுண்டு.

இடமிருந்து வலம்

1. சமையலில் பயன் படும் வாசனைத்திரவியம்.
4. எறும்பு தன் உடல் எடையைப் போல ஐம்பது மடங்கு ..... தாங்கக் கூடியது.
5. இதன் சராசரி நீளமே 100 அடி இருக்கும்.
7. நீராடு
8. இதற்குச்சக்கரவர்த்தி கம்பன்.



10. இலங்கையின் பண்டைய துறைமுக நகரம்.
11. அந்தம் உண்டென்றால் இதுவும் உண்டு.
12. இரவு இவனுக்குப் பிடிக்கும்.

முடிவுத்திகதி - 20. 11. 1994

சரியான விடையினை கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் வெட்டி ஒட்டி 'மின்மினி' முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

சரியான விடை எழுதி அனுப்பும் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா ரூ. 50/ = பரிசு வழங்கப்படும்.

❀ சிறுநீர் கடுப்பு உள்ளவர்கள் நான்கு சிறிய வெங்காயத்தைத் தோலுரித்து மென்று தின்று ஒரு டம்ளர் மோர் குடித்தால் நலம் கிடைக்கும்.

❀ துளசி இலைச் சாறு பிழிந்து அதைத் தலையில் தேய்த்து அரைமணி நேரம் சென்று குளிர்ந்த நீரில் குளித்தால் பேன் தொல்லை ஒழியும்.

ஐரோப்பாவிலுள்ள மொனாக்கோ என்னும் நாடுதான் உலகின் இரண்டாவது மிகச்சிறிய நாடாகும். பரப்பளவு 1.5 ச.கி.மீ. சனத்தொகை 30,000.

முட்டைக்குள் இருப்பதைப் பற்றி அதிதீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்தப் பொடியர் 'மார்மோசெட்' எனப்படும் மிக அபூர்வமான சின்னஞ்சிறு குரங்கினத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்திலுள்ள வனவிலங்கு பூங்காவொன்றிலே வாழ்ந்து வருகின்றார், இந்தச்சிறு குரங்கார்.

அட! நம்ம கட்சி!!

இங்கிலாந்து இளவரசி டயானா 1977 இல் நடைபெற்ற G.C.E (O/L) பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் இருதடவை பெயிலாகியிருக்கின்றார். ஆதாரம் - THE BOOK OF ROYAL LISTS.

தன்னடக்கம்

தமது பெண்மைக்கு ஆபத்து நேரும் காலங்களில் பெண்கள் அலம்சையை அனுஷ்டிக்க வேண்டும் என்று நான் கூறமாட்டேன். எந்த ஆயுதத்தை வேண்டுமானாலும் உபயோகித்து அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளலாம்.

இயற்கை வழங்கியிருக்கும் ஆயுதங்களான பற்கள், நகங்கள் முதலியவை எங்கே போய்விட்டன? எவ்விதமேனும் தங்களின் பெண்மையைக் காப்பாற்றிக் கொண்டு ஆபத்து விளைவிக்க முயலும் அயோக்கியர்களைக் கொல்லவும் கொல்லலாம். அந்தக் கொலையும் ஒரு பாவமல்ல!

-மகாத்மா காந்தியடிகள்

தாங்குமா கயிறு?

ஒரு தனிக்கயிற்றில் அதிகபட்சம் எத்தனைபேர் தொங்கலாம்? தெரிந்து கொள்ள புரட்டுங்கள் 31 ஆம் பக்கத்தை.

மிக வேகமாக ஓடும் இரண்டாவது விலங்கு 'ப்ரொங்ஹோர்ன் அன்டிலோப்' எனும் ஒரு வகை மானினம். வேகம் மணிக்கு 55 மைல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தமிழ்ச்சேவை மேலதிக பணிப்பாளர்

வி. என். மதியழகன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மேலதிக தமிழ்ச்சேவை பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றிருக்கின்றார். இவர் கடந்த நான்கு ஆண்டுகளாக இயல், நாடக கட்டுப்பாட்டாளராக பணிபுரிந்தவர். 1971 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராக இணைந்த பின்னர், அறிவிப்பாளர், செய்திகள், நடப்பு விவகார தயாரிப்பாளர் நிகழ்ச்சித்தொடர்பு உத்தியோகத்தர் கிராமிய நிகழ்ச்சி தயாரிப்பாளர் போன்ற பதவிகளை வகித்தார். பின்னர், நிகழ்ச்சி அமைப்பாளராக பதவி உயர்வு பெற்றார். 1979 ஆம் ஆண்டு சுயாதீன தொலைக்காட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதிலிருந்து செய்தி வாசிப்பாளராக இவர் விளங்கி வருகின்றார். தற்போதைய தொலைக்காட்சி தமிழ் செய்தி வாசிப்பாளர்களில் சிரேஷ்ட தகுதி இவருக்கே உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிபரப்புத்துறையில் சேர்ந்து கொள்வதற்கு முன்னர் பல வருடங்கள் பத்திரிகையாளராக விளங்கியவர். ஒலிபரப்புத்துறையின் சகல அம்சங்களிலும் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருக்கும் இவர் ஆசிய பசுபிக் ஒலிபரப்பு நிறுவனம், மலேசிய 'இப்தார்' ஒலிபரப்பு பயிற்சி நிறுவனம், ஜேர்மன் 'டொய்ச்சுவலர்' ஒலிபரப்பு பயிற்சி நிறுவனம், சிங்கப்பூர் ஒலிபரப்பு பயிற்சி நிறுவனம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பயிற்சி நிலையம் என்பனவற்றின் பல்வேறு பயிற்சிக்களங்களில் பங்குபற்றி பட்டங்களும் சான்றிதழ்களும் பெற்றிருக்கின்றார். ஒலிபரப்பு முகாமைத்துவத்தில் விசேட பயிற்சிகள் இவருக்குண்டு. பெரும்பாலான வெளிநாட்டு தலைவர்களின் இலங்கை விஜயத்தின்போது இவர் நடாத்திய வானொலி நேர்முக வர்ணனைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியனவாகும். தொலைக்காட்சியில் 'ஆயுபோவன்' என்ற காலைநேர நிகழ்ச்சி அறிவிப்பாளர்களில் ஒரு முன்னோடி இவர். 70 களில் இவர் வானொலியில்நடத்திய சங்கநாதம், ஆடல் அரங்கு, வாலிபர் வட்டம் போன்ற நிகழ்ச்சிகள், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் பிரபலம் பெற்றுவிளங்கின.

வானொலிக்கலைஞன், பாடலாசிரியர், வர்த்தக அறிவிப்பாளர் என்ற தகுதிகளையும் கொண்ட மதியழகன் கல்வளை சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவர். சண்டிலிப்பாய் வாணிநிகேதனம், மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கிலப்பாடசாலை, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அக்கடமி, கொழும்பு அக்குவைனாஸ் பல்கலைக்கழக்கல்லூரி என்பவற்றின் பழைய மாணவன். விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவரென்பதில் பெருமை கொள்ளும் இவர் விவசாயப் படிப்பிலே உயர்தகைமையும் பெற்றிருக்கின்றார். மனைவியும் ஒரு மகனையும் கொண்ட அன்பான குடும்பத்துக்கு தலைவராகவும் விளங்குகின்றார் மதியழகன்.

இதய மீட்பு

நான் குத்தகைக்கு
எடுத்த அவளது இதயத்தை
மீளப்பெறுவதற்காய்
அவள்
அனுப்பிய நோட்டீசு
அவளது
'திருமண அழைப்பிதழ்'

-ப்ளூலைட்

மனித உடலிலுள்ள இரண்டாவது பெரியஉடலுறுப்பு மூளை. எடை ஆண்-1408 கிராம் பெண்-1263 கிராம்.

சோதனையிலும் சாதனை!

சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற அழகுராணிப்போட்டியில் 'மிஸ் அமெரிக்கா'வாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஹீதர் வைட்ஸ்டோன் என்னும் அழகிய யுவதி. 21 வயதாகும் இவர் ஒரு கணக்கியல் நிபுணர். போட்டியின்போது கேள்வி கேட்பவர் சைகை மொழியில் தான் இவரிடம் உரையாட வேண்டியிருந்தது.

ஏன் என்று கேட்கிறீர்களா? இவருக்கு பிறவியிலிருந்தே காது கேட்காது. இந்தக் குறையை பொருட்படுத்தாமல் அலபாமா மாநில அழகுராணி போட்டியில் கலந்துகொண்டு 'மிஸ் அலபாமா'வாக தெரிவாகியிருந்த இவர் தற்போது 'மிஸ் அமெரிக்கா'வாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். 'எனது குறை எனக்கு எப்போதுமே ஒரு தடையாக இருந்ததில்லை. இது ஆக்கபூர்வமான எண்ணங்களுக்கு ஒரு வாய்ப்பாக இருப்பதாகவே நான் எண்ணுகின்றேன்' என கூறுகின்றார் இவர். முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதற்கு இவரும் ஓர் எடுத்துக்காட்டு.

உலகில் அதிகம் பேசப்படும் இரண்டாவது மொழி ஆங்கிலம். பேசுபவர்களின் எண்ணிக்கை 43,10,00,000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி

முத்திரை எக்ஸ்சேஞ்

என்னிடம் ஏராளமான வெளி நாட்டு உள்நாட்டு தபால் முத்திரைகள் உள்ளன. மாற்றிக்கொள்ள விரும்பு கின்றேன்.

டி. சஞ்சீவ்குமார்
348, அரும்பாவத்தை வீதி,
கொழும்பு 13.

மாணவர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எமது கல்வி நிறுவனத்துக்கு மாணவர் தேவை. ஆண்டு 1 இலிருந்து 12 வரை வகுப்புகளும் தையல் வகுப்பும் உண்டு.

I.D.S
49, விவேகானந்தா மேடு,
கொழும்பு 13.

வாடகைக்கு அறை

க.பொ. த. உயர்தரம் கல்வி பயிலும் நான் மூன்று வேளை உணவுடன் தங்குவதற்கு அறையொன்றை கொழும்பு நகரினுள் எதிர்பார்க்கின்றேன். தயவு செய்து அறியத்தரவும்.

பி. பிரபாகர்,
427/5 காலி வீதி,
கல்கிசை.

ஜெமினி சினிமா ரசிகர்

1987 இலிருந்து 1989 வரையுள்ளதும் 1991 இல் பெப்ரவரி யிலிருந்து செப்டெம்பர் வரையுள்ள துமான ஜெமினி சினிமாக்கள் தேவைப்படுகின்றன. வைத்திருப்போர் தொலைபேசியில் அறியத்தரவும். பணம் தர தயாராக உள்ளேன்.

N.K திரு (Purchasing Manager)
தொலைபேசி இல.
(941) 452290.453929

(உதவி பகுதி மூலம் இணைகின்ற வாசகர்களின் வெற்றி தோல்விக்கோ இதர பிரச்சினைகளுக்கோ 'மின்மினி' பொறுப்பேற்காது. வாசகர்களை இணைக்கும் பாலமாக விளங்கும் 'உதவி' பகுதிக்கு, உங்கள் தேவைகளை சுருக்கமாக ஒரு தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். இதற்கு கட்டணம் இல்லை.)

மனிதன் செய்யும் ஒவ்வொரு பாவமும், அதற்கான தண்டனையையும் கூடவே அழைத்துக் கொண்டேதான் வரும்.

—ஜார்ஜ் ஹெர்பெர்ட்

ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் அவன் மரணம் ஒத்திப்போடப் படுகிறது.

—இத்தாலியப் பழமொழி

உலகின் இரண்டாவது உயரமான கட்டிடம் அமெரிக்காவின் நியூயார்க் நகரிலுள்ள 'உலக வர்த்தக நிறுவனம்' (WORLD TRADE CENTRE) உயரம் 1388 அடி.

காகம் என்ன நிறம் என்று கேட்டால் உடனே கறுப்பு என்று கூறுவீர்கள். ஆனால் சென்னை கிண்டி சிறுவர் பூங்காவிற்கு புதிதாக வந்திருக்கும் காகம் ஒன்று முற்றிலும் வெண்மை நிறத்தில் இருக்கின்றது. இந்த அபூர்வ வெள்ளைக்காகத்தை கண்டு சிறுவர்களும் பெரியவர்களும் தாம் காண்பது கனவோ என ஆச்சரியத்தில் கண்களை அகல விரிக்கின்றார்களாம்.

THE HINDU வில் இருந்து எம். சேகர்

கேள்வி பதில்

அடுத்த இதழிலிருந்து 'கேள்வி பதில்' எனும் பகுதி ஆரம்பமாகவுள்ளது. உங்கள் சுவாரசியமான கேள்விகளை ஒரு தபாலட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள்.

'மின்மினி'
12/1, பிக்கரிங்ஸ வீதி,
கொழும்பு -13.

மூன்றாம் தலைமுறை எம். பி!

புதிய அரசாங்கத்தில் உல்லாசப் பிரயாணம், விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சராக விளங்குபவர் திருமதி நிருபமா ராஜபக்ஷ. 32 வயதாகும் இவர் அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து போட்டியிட்டு தெரிவாகியவர். இவரது குடும்பம் நாடாளுமன்றத்துக்கு பிரவேசித்த இரண்டாவது 'மூன்றாம் தலைமுறை' குடும்பம் என்னும் சிறப்பை பெறுகின்றது. இதற்கு முன்னர் மீதெனிய குடும்பத்தைச்சேர்ந்த J.H மீதெனிய அதிகார். அவரது மகள் திருமதி அபேவீர் மொலாமூர், மொலாமூரது மகள் சீதா செனவிரத்ன ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கின்றார்கள். திருமதி ராஜபக்ஷவின் தாத்தா டொன் மாத்யூ ராஜபக்ஷ அரசுச் சபைத்தின் பிரதிநிதியாகவும், தந்தை ஜோர்ஜ் ராஜபக்ஷ 1960 இலிருந்து 1976 வரை நாடாளுமன்றத்தில் சுகாதார மின்வலத்துறை அமைச்சராகவும் பணிபுரிந்திருக்கின்றார்கள். கொழும்பு மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான திருமதி ராஜபக்ஷ 1982 ல் முல்கிரிகல தொகுதியின் சுதந்திர கட்சி அமைப்பாளராக தனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்தவர்.

'எனது மாவட்டத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதும் எனது குடும்பத்தினர் விட்டுச் சென்ற நற்பெயரை காப்பாற்றுவதுமே எனது முக்கிய நோக்கம்' எனக்கூறுகின்றார் இந்த இளைய அமைச்சர்.

ஆங்கில மொழியில் எழுதும் போது பொதுவாக அதிகம் பயன்படுத்தப்படும் இரண்டாவது சொல் OF.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12-வது — ஆசிய விளையாட்டுக்கள் ஹிரோஷிமா சிட்டி

உலகின் இரண்டாவது பெரிய நகரம் மெக்ஸிக்கோவிலுள்ள 'மெக்ஸிகோ சிட்டி

✱ போட்டிகளில் கலந்து கொண்ட மொத்த நாடுகளின் எண்ணிக்கை 43. வீரர்கள் 7,300 பேர்.

✱ போட்டிகளுக்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் விமானநிலையம், விளையாட்டரங்கம், விளையாட்டுக் கிராமம் ஆகியன அமைக்கப்பட்டன.

✱ இந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக சென்ற இலங்கை வீரர்களின் எண்ணிக்கை 41.

✱ சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த நாடுகளான கசகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் உஸ்பெஸ்கிஸ்தான் ஆகிய நாடுகள் முதன் முறையாக, இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றின.

✱ ஈராக், வடகொரியா ஆகியஇரு நாடுகள் மட்டுமே இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை.

✱ பலஸ்தீனம், மொங்கோவியா ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒரு வீரரே போட்டிக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள்.

✱ 12 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் முதலாவது தங்கப்பதக்கத்தை பெண்களுக்கான தனிநபர் கராத்தே போட்டியின் மூலம் தட்டிக் கொண்டவர் 29 வயதான ஹிசாமி யோக்கோயாமா என்னும் ஜப்பானிய வீராங்கனை.

✱ இலங்கையின் சார்பாக அதிக எதிர்பார்ப்புக்களுடன் விளங்கிய மரதன் வீரர் கருணாரத்ன, குறுந்தூர ஒட்ட வீரர் சிறியந்த திலகாயக்க ஆகியோர் வெற்றி வாய்ப்புகளை நழுவிவிட்டனர்.

✱ 200 மீட்டர் ஒட்டப்போட்டியில் இலங்கையின் சார்பாக சுசன்திகா ஜயசிங்க, தமயந்தி தர்ஷா ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலப்ப தக்கங்களை வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்தனர்.

✱ ஜோர்தானிய மன்னர் ஹுசெய்னின் மகளும் போட்டியில் பங்குபற்றி யிருந்தார். 20 வயதான இவர் குதிரையேற்றப்போட்டியின் போது குதிரையிலிருந்து தடுக்கி விழுந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டார்.

✱ இதேபோல போட்டி ஆரம்ப நாளின் போது நேபாள வீரர்களின் தலைவர் நரேஷ்குமார் அதிகாரி அணிவகுப்பின் போது இறந்து போனது, இன்னொரு வருந்தக்கூடிய சமாசாரமாகும்.

✱ போட்டிகளின் போது கூட்டம் அதிகமாக இருந்தது ஜிம்னாஸ்டிக் போட்டிகளுக்குத்தான். இதற்கு அடுத்தபடியாக உதைபந்தாட்டத் திற்கும் வொலிபால் விளையாட்டிற்கும் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது.

✱ ஜப்பான் செல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததை பயன்படுத்தி இதுதான் சமயம் என்று இலங்கையின் 5 வீரர்கள் உட்பட மொத்தம் 15 வீரர்கள் தலைமறைவாகியிருக்கின்றார்கள்.

✱ 34 விளையாட்டுக்களில் 337 பதக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

✱ பதக்கங்களை அதிகமாக சுவீகரித்த நாடுகளாக சீனாவும் அதற்கடுத்து தென் கொரியாவும் முன்றாவது இடத் தில் ஜப்பானும் விளங்கின.

✱ அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 1998 ம் ஆண்டு தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் நடக்கவிருக்கின்றன.

உலகின் மிகச்சிறந்த, மிகவும் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரர் பீலே 1940ஆம் ஆண்டு பிரேஸிலில் பிறந்தார். இவரது உண்மையான பெயர் 'எட்சன் அராண்டஸ் டோ நசிமென்டோ' என்பதாகும். உலகக்கிண்ண உதைபந்தாட் டத்தில் மூன்று முறை (1958, 1962, 1970) பிரேஸிலின் வெற்றிக்கு அடிகோலியவர் பீலே. 'பீலே' என்றால் 'பாதம்' என்று அர்த்தமாம். சில சமயம் இவரை அழைக்கும் பெயர் 'கறுப்பு முத்து'. 1969 நவம்பர் 20 ந் திகதி இவரது 909 ஆவது முதல்தர போட்டிகளின் போது தனது 1000 வது கோலை போட்டார். ஒருசமயம் பிரேஸிலுக்கு பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் விஜயம் செய்தபோது பீலேயைச் சந்திக்க வேண்டுமென்று ரொம்பத் துடிப்பாக இருந்தாராம்! அரசியைச் சந்தித்து வணக்கிக் கை குலுக்கிய பீலே அவரிடம் 'மேன்மை தங்கிய அரசியார் இந்த எளியவனுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்தது ஏனோ?' என்று மனம் நெகிழ்ந்து கேட்டார். அதற்கு அரசியார், 'ஐயா' நான் இங்கிலாந்துக்கு அரசியாக இருக்கலாம். அது பெரிய விஷயமில்லை. ஆனால், நீங்கள் 'உதைபந்தாட்ட உலகத்துக்கே' முடிசூடா மன்னராக விளங்குகிறீர்களே? உங்களுக்கு நான் மரியாதை கொடுக்க வேண்டாமா?' என்று அன்போடு கூறினராம்.

உலகின் இரண்டாவது மிகப்பெரிய நாடு கனடா. பரப்பளவு 99,70,537 ச.கி.மீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்னசின் கதை

பைபிளுக்கு அடுத்ததாக உலகில் அதிகமாக விற்பனையாகும் புத்தகம் கின்னஸ் சாதனைப்புத்தகம் (The Guinness Book of Records) கின்னஸில் தங்கள் பெயர்வந்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் சில சமயங்களில் உயிரையும் துச்சமாக மதித்து 'சாதனை செய்கிறேன்' என்று குதிப்பவர்கள் ஏராளம். இந்த கின்னஸ் புத்தகம் தோன்றிய காரணம் சுவையானது. 1951 ம் ஆண்டு லண்டன் கின்னஸ் கம்பனியின் முகாமைத்துவ இயக்குனராக இருந்த சா ஹியூ பீவர் என்பவர் வேட்டையாடுவதற்காக தனது நண்பர்களுடன் புறப்பட்டார். அன்றைய வேட்டையின் போது பறவைகள் சில இந்த குழுவினருக்கு போக்குக்காட்டி அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்ததனால் இவர்கள் வெறுங்கையுடன் திரும்பவேண்டியதாகிவிட்டது. பீவருக்கோ பெரும் ஏமாற்றம். 'ஐரோப்பாவிலேயே மிக வேகமான பறவைகள் அவையாக இருக்குமோ?' என்ற எண்ணம் எழுந்தது. நூல்நிலையத்துக்கு சென்று பல புத்தகங்களை புரட்டிப்பார்த்தும் அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அப்போதுதான் பீவருக்கு 'அடே' இதேபோல நிறைய கேள்விகளுக்கு விடை தெரியாமல் இருக்கின்றதே! உயரமானது, வேகமானது, பழைமையானது என எத்தனையோ சாதனைகள்! இவையெல்லாவற்றையும் தொகுத்து தனியாக ஒரு புத்தகம் அச்சிட்டு வெளியிட்டால் என்ன? என்று ஓர் ஐடியா தோன்றியது. உடனே லண்டனில் தகவல் ஏஜன்சி ஒன்றை நடத்திவந்த நொரிஸ் மற்றும் ரொஸ் மெக்வோட்டா சகோதரர்களை சந்தித்து தனது திட்டத்தை தெரிவித்தார். முவரும் இணைந்து லண்டனில் புதிய அலுவலகம் ஒன்றை திறந்தார்கள் முதல் கின்னஸ் புத்தகம் 1955 ஆகஸ்ட் மாதம் வெளிவந்தது. வெளிவந்து மூன்று மாதங்களுக்குள்ளேயே பிரிட்டனில் அதிக விற்பனையாகும் புத்தகங்கள் வரிசையில் முதலிடத்தை பிடித்துக்கொண்டது. அன்றிலிருந்து இன்றுவரை பிரிட்டனில், விற்பனையில் நம்பர் வன புத்தகம் கின்னஸ்தான். இன்று 29 மொழிகளில் கின்னஸ் விற்பனையாகி வருகின்றது. கின்னஸ் சாதனைப்புத்தகத்திலே சில இலங்கைச் சாதனைகளும் ஆங்காங்கே தெளிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கைச் சாதனைகள் சிலவற்றுடன் எமது கின்னஸ் பயணத்தை ஆரம்பிப்போம். என்ன, நீங்கள் ரெடிதானே?

பெண்ணாட்சி!

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, உலகில் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவர் என்பது நம் [illegible] தெரியும் பிரதமர் [illegible] ஆண்களுக்குத்தான் [illegible]

அதிகளவு தங்கத்தை உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடு ரஷ்யா.

ஆம் ஆண்டு ஜூலை பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மூலம் வெற்றிபெற்ற இவரது பெயர் கின்னஸில் என்றென்றும் முறியடிக்கப்படாத ஒன்று!

களைத்து விழுந்த வக்கீல்கள்!

கின்னஸில் இடம்பெறும் அளவுக்கு மிக நீண்ட வழக்கு விசாரணை ஒன்று நமது நாட்டில் நடந்திருக்கின்றது! 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்ற ஜனாதிபதி ரணசிங்க பிரமேதாசவுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்தவர் அப்போதைய எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க. தேர்தல் ஊழல் சம்பந்தமாக நடைபெற்ற இந்த வழக்கில் சாட்சியமளித்தவர்கள் தொகை மொத்தம் 977! 1989 ஜூன் 19 இலிருந்து 1992 ஜூன் 30 வரை வக்கீல்கள் வாதாடி களைத்துப்போகும் அளவுக்கு ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு மேல் இந்த வழக்கு தொடர்ந்தது. மிகச்சரியாக 527 நாட்கள் விசாரிக்கப்பட்டு இறுதியில் 1992 செப்டெம்பர் முதலாம் திகதியன்று இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. யப்பா! மிக நீ.....ண்ட வழக்கு!

பாம்புகள் ஜாக்கிரதை!

லீவில் ஊருக்குப் போனால் வயல்வெளிகளில் கவனமாக பார்த்து நடந்து செல்லுங்கள். ஏனென்றால் உலகில் வேறெந்தப்பிரதேசத்தையும் விட இலங்கையில் தான் அதிகளவு மக்கள் பாம்புக்கடியால் இறக்கின்றார்கள் என கின்னஸ் கூறுகின்றது. ஆண்டுதோறும் சராசரியாக 800 பேர் பாம்புகளிடம் மாட்டிக்கொண்டு உயிரை விடுகின்றார்களாம். அதிலும் 95 சதவீதமான மரணங்கள் நல்லபாம்பு, விரியன் போன்ற பாம்புகளின் கைவரிசையால் ஏற்படுபவை!

கின்னஸ் ஆச்சரியங்கள்!

அதிகளவு வைரத்தை உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடு ஆபிரிக்காவிலுள்ள ஸைரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவில் இருப்பது ராஜா 1986 இல்

● கண்டி பொஹரா ஸ்ர்வலத்தில் புத்தரின் புனித தந்தத்தை தாங்கிச் செல்லும் யானைகளுக்கு எப்பொழுதும் ராஜமரியாதை உண்டு. இந்த புனித பணியை 1931 இலிருந்து செய்து வந்த யானைதான் 'ராஜா' என்ற ஆண் யானை. இது 1988 ஆம் ஆண்டு ஜூலை 16 ந் திகதி இறந்து போனது. இறக்கும் போது அதற்கு வயது 81 ! உலகில் வேறு எந்த ஒரு பாலூட்டியும் (மனிதனைத்தவிர) இவ்வளவுகாலம் உயிர்வாழ்ந்ததில்லை.

உயர்ந்துவிட்ட தூபி!

● ஏறத்தாழ 400 அடி உயரத்தை உடையது அநுராதபுரத்திலுள்ள ஜேதவனராமய தூபி. உலகிலுள்ள தூபிகளிலேயே உயரமானது இதுதானாம்.

ஸ்லோவாக ஓர் 200!

● 1987 ஆம் ஆண்டு ஏப்பிரல் 16 ஆம் திகதி நியூஸிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட்டொன்று கொழும்பில் ஆரம்பமானது. இலங்கையின் சார்பாக களத்தினுள் நுழைந்தார் பிரெண்டன் குருப்பு. மிக நிதானமாக, மிகப்பொறுமையாக 12 மணித்தியாலங்கள் 57 நிமிடங்கள் விளையாடி 201 ஒட்டங்களுடன் நொட் அவுட் பாட்ஸ்மேனாக வெளியே வந்தார். வெளியே வந்தபின்னர்தான் தெரிந்தது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே, ஓர் இன்னிங்ஸில் மிக மெதுவாக ஓர் இரட்டைச்சதத்தை பெற்ற ஆசாமி இவர்தான் என்று! இதற்காக548 பந்துகளை வியர்க்க விறுவிறுக்க இவருக்கு போட்டிருந்தார்கள் நியூஸிலாந்துக்காரர்கள்!

சாதனைக்கோர் இலங்கன்று!

● ஒரு குறிப்பிட்ட தூரத்திலிருந்து பந்தை அடித்து குழிக்குள் விழச்செய்யும் விளையாட்டு கோல்ஃப். இந்த கோல்ஃப் விளையாட்டில் உலகிலேயே வயதில் குறைந்த தேசிய சாம்பியன் என்ற சாதனைக்குரியவர் இலங்கையரான துசானி செல்வரட்ணம். 1989 ஆம் ஆண்டு ஏப்பிரல் 29 ம் திகதி நுவரெலியாவில் நடைபெற்ற கோல்ஃப் விளையாட்டுப்போட்டியொன்றில் இவர் வெற்றி பெற்ற போது இவருக்கு வயது 12 வருடங்கள் 324 நாட்கள் மட்டுமே!

(ஆச்சரியங்கள் தொடரும்)

GUINNESS BOOK OF RECORDS என்ற புத்தகத்திலிருந்து.

பெண்களுக்கு வாக்குரிமை அளித்த இரண்டாவது நாடு அவுஸ்திரேலியா. ஆண்டு 1902.



படத்திலிருப்பவர் பெயர் ரேமண்ட் காக்னன். அமெரிக்காவின் மாசாசுசெட்ஸ் மாநிலத்தை சேர்ந்தவர். இவர் நமக்கு காட்டுவது அவர் கட்டிய பொம்மை வீட்டைத்தான். சாதாரண வீடல்ல. முழுக்க முழுக்க பத்திரிகை தாள்களைக் கொண்டு கட்டிய வீடு அது. பழைய நேஷனல் ஜியோகிரபிக் சஞ்சிகைகளின் தொகை வீட்டில் ஏறிக்கொண்டே போக இதை வைத்து ஏதாவது செய்தால் என்ன என்ற யோசனைதோன்றியது இவருக்கு. சஞ்சிகைகளின் கலர் பக்கங்களை மட்டும் கிழித்தெடுத்து பென்சிலோடு சுற்றி ஒட்டி தனது செல்வ மகளுக்கு விளையாட்டு வீடுகளாக செய்ய ஆரம்பித்து விட்டார். 5 அடி அகலமுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட வீடுகள் இவரது ஸ்பெஷாலிட்டி. இதுவரை பல டசின் காகித வீடுகள் இவரது கைவண்ணத்தில் உருவாகியுள்ளன. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்!

1946 பெப்ரவரி 26 ஆம் திகதி இலங்கைக்கு முதன்முதலாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு வாகனத்தைக்கண்டு மக்கள் அதிசயித்துப் போனார்கள். அந்த வாகனம் 'டபிள் டெக்கர்' பஸ் வண்டி.



உலகின் இரண்டாவது பெண் பிரதமர் இந்தியாவின் இந்திரா காந்தி. பதவிக்கு வந்த ஆண்டு 1966.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வலம் 1

ஜப்பான்



ஹொன்ஷூ, ஹொக்கைடோ, கியூஷூ, ஷிகோகூ என்னும் நான்கு பிரதான தீவுகளைக் கொண்டு அமைந்ததே ஜப்பான். ஜப்பான் ஆசியாவின் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

பரப்பளவு	- 3 இலட்சத்து 77 ஆயிரத்து 727 சதுர கிலோமீட்டர்.
சனத்தொகை	- 12 கோடியே 45 இலட்சம்
சனஅடர்த்தி	- 2149 பேர் (சதுர கி. மீட்டருக்கு)
தலைநகரம்	- டோக்கியோ (சனத்தொகை 81 இலட்சம்)
பிரதான நகரங்கள்	- ஒஸாகா, நகோயா, யோக்கோஹாமா, கியோட்டோ, கவசாகி, ஃபுகுஓகா
மொழி	- ஜப்பானிய மொழி
தேசிய இனங்கள்	- ஜப்பானியர்கள் 99.4 சதவீதம், கொரியர்கள் 0.5 சதவீதம்.
மதம்	- பௌத்தம், ஷின்டோ மதம்
பொருளாதாரம்	- கைத்தொழில், மின் இலத்திரனியல் உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் இரசாயனங்கள் உற்பத்தி
விவசாய நிலம்	- 13 சதவீதம்
தொழிலாளர் படை	- 8 சதவீதம் விவசாயம். 32 சதவீதம் கைத்தொழில், சுரங்கத்தொழில். 43 சதவீதம் சேவைகள் வியாபாரம்.

உலகின் இரண்டாவது பெண் ஜனாதிபதி ஐஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த 'விக்டிஸ் பின்பொகாடொட்டிர்' பதவிக்கு வந்த ஆண்டு 1980.

நாணயம்	- யென் (1 ¥ = 0.5 சதம்)
மொத்தத் தேசிய உற்பத்தி	- 2 டிரில்லியன் (2×10^{12})
தனிநபர் வருமானம்	- 9 இலட்சத்து 35 ஆயிரம் (ஆண்டுக்கு)
சராசரி ஆயுட்காலம்	- ஆண் 77 வயது . பெண் 82 வயது
பிறப்பு (ஆண்டுக்கு)	- ஆயிரத்திற்கு 10
இறப்பு (ஆண்டுக்கு)	- ஆயிரத்திற்கு 7
சனத்தொகை வளர்ச்சி விகிதம்	- 0.3 சதவீதம்
மருத்துவமனைகள்	- 10,098
மருத்துவமனையில் படுக்கைகள்	74 பேருக்கு ஒன்று
டாக்டர்கள்	- 588 பேருக்கு ஒருவர்
சிசு மரணம் (ஆண்டுக்கு)	- ஆயிரத்திற்கு 4
கல்வி அறிவு	- 99 சதவீதம்
தொலைக்காட்சி	- 1.8 பேருக்கு ஒன்று
வானொலி	- 1.3 பேருக்கு ஒன்று
தொலைபேசி	- 2.3 பேருக்கு ஒன்று
செய்திப் பத்திரிகைகள்	- 125
சினிமா தியேட்டர்கள்	- 1804
அரசியல் அமைப்பு முறை	- பாராளுமன்றக் குடியரசு
அரசுத்தலைமை	- சக்கரவர்த்தி
நாட்டின் ஆட்சியாளர்	- பிரதம மந்திரி
பாராளுமன்றத்தின் பெயர்	- டயட்
தேசிய கீதம்	- "கிமி கா யோ வா" (தங்கள் சமாதான ஆட்சி நீண்டு நிலைபெறுவதாக!)
பாதுகாப்புச் செலவு	- மொத்தத் தேசிய உற்பத்தியில் ஒரு சதவீதம்.
இராணுவம்	- தரைப்படை ஒரு இலட்சத்து 96 ஆயிரம்பேர், கடற்படை 56 ஆயிரம் பேர். விமானப்படை 46 ஆயிரம் பேர்.
சர்வதேச உறுப்பினர்	- ஐக்கிய நாடுகள், கொழும்புத்திட்டம்,OECD
தூதரகம்	- 20 Gregory's Road, Colombo -7

こんにちは!

கொன்னிச்சிவா

(வணக்கம்)







தற்போது உலகில் 10 கோடிப் பேர் அடிமைகளாக வாழ்கிறார்கள் என்று புகழ்பெற்ற நியூஸ்வீக் பத்திரிகை கூறுகிறது.

செருக்கும், தற்பெருமையும் மனிதனின் முதல் பாவங்கள்.
—பிரான்ஸ் நாட்டுப் பழமொழி.

ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டாவது செயலாளர் நாயகம் சுவீடனைச்சேர்ந்த டாக் ஹமர்சீல்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டரைக் கேளுங்கள்.

மாலினி புவன குமார்
(M.B.B.S Cey.)

உமிழ் நீரால் எய்ட்ஸ் பரவுமா?

வே. பிரகாஷ், கொழும்பு 06.

எழுதும் போது எனது கை நடுங்குகிறது. இது ஒரு நோயா டாக்டர்?

எழுதும் போது சிலருக்கு கை நடுங்குவது, அநேகமாக இளவயதினருக்கு மனப்பதட்டத்தினாலும், வயதுபோனவர்களுக்கு நரம்புத்தளர்ச்சி மற்றும் நரம்புசம்பந்தமான நோய்களாலும் ஏற்படலாம். எதற்கும் ஒரு வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெறுவது நல்லது.

ரம்ஸி ஹமீட், வெல்லம்பிட்டி.

மச்சம் ஏன் தோன்றுகிறது டாக்டர்?

சாதாரணமாக எமது சருமத்துக்கு நிறத்தைக்கொடுப்பது மெலனின் (MELANIN) எனப்படும் ஒரு நிறப்பொருளாகும். சிலருக்கு உடம்பின் சில பாகங்களில் இந்நிறப்பொருளை உண்டாக்கும் கலங்கள் அதிகளவு எண்ணிக்கையிலும் கூடிய செயற்பாட்டுடனும் மெலனின் நிறப்பொருளை தயாரிக்கின்றன. இதனால் அப்பாகத்தில் மச்சம் தோன்றுகின்றது.

க. தேவகி, கொழும்பு 04.

எனக்கு வயது 21. நான் அதிகமான தலைப்பொடுகினால் அவதிப்படுகின்றேன். இதனை எவ்வாறு நீக்குவது?

தலைப்பொடுகை நீக்குவதற்கு HEAD AND SHOULDER SHAMPOO அல்லது POLYTAR SHAMPOO வை பயன்படுத்தினால் குணம் கிடைக்கும். NIZORAL SHAMPOO வும் தலைப்பொடுகிற்கு சிறந்த நிவாரணியாகும்.

எம். எச். முகமட் அஸ்மி, சம்மாந்துறை.

எனது கால்களில் மட்டும் வறண்ட சருமம் காணப்படுகின்றது. இதனை நீக்குவதற்கு என்ன வழி?

இது பிறப்பமைப்பு காரணமாகவும் ஏற்படக்கூடிய நோயாகும். சாதாரண சவர்க்காரங்களை இதற்கு பாவித்தல் கூடாது. நீங்கள் தொடர்ந்து MOISTURING SOAP இனை பாவித்து வருதல் நல்லது.

வ. பார்த்திபன், மட்டக்களப்பு.

எனக்கு அடிக்கடி தலைவலி வருகின்றது. கண்பார்வையும் சிறிது மங்குவது போல் தெரிகின்றது. இதற்கு என்ன காரணம்?

உங்கள் வயது, தலைவலி பற்றிய விபரம் எந்த நேரத்தில் எவ்வளவு காலமாக போன்ற விபரங்களை நீங்கள் குறிப்பிடவில்லை. கண்பார்வை குறைவு காரணமாகவும் தலைவலி வரலாம். எதற்கும் ஒரு கண் வைத்தியரை அணுகி வைத்தியம் செய்து கொள்வது நல்லது.

ரா. பெர்னாட், வத்தளை.

எனது வயது 20. எனக்கு அடிக்கடி தலைமுடி உதிர்கின்றது. ஏன்?

இதற்கு பல காரணங்கள் உண்டு. மனக்கவலை, உளத்தாக்கம், ஆப்பரேசன், காலநிலை போன்ற காரணங்களால் இவ்வாறு ஏற்படலாம். மேலும் ANTROGEN எனும் ஆண்வகை ஓமோன் அதிகமானாலும் தலை முடி உதிர வாய்ப்பு இருக்கின்றது.

ஏ. எச். எம். ஜுனைதீன், ஏறாவூர்-3.

'எய்ட்ஸ்' உமிழ்நீர் மற்றும் உடலில் இருந்து வெளியேறும் கழிவுகள் மூலமாகவும் பரவுமா?

சாதாரணமாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடல் சுரப்புக்களில் எய்ட்ஸ் கிருமி உண்டு என்று நிரூபிக்கப்பட்டாலும் உமிழ்நீர், தாய்ப்பால், சிறுநீர், வியர்வை போன்ற வற்றால் எய்ட்ஸ் நோய் பரவுவதில்லை.

எல் ராமச்சந்திரன், கொழும்பு -11

டாக்டர் எனக்கு வயது 23. நான் நன்றாகச் சாப்பிட்டும், உடற்பயிற்சிகளை மேற்கொண்ட போதிலும் உடல் கொழுப்பதாக தெரியவில்லை. இதற்கு காரணம் என்ன?

சிலருக்கு உடம்பு ஆரோக்கியமாக இருந்தாலும் நிறைய உணவு சாப்பிட்டாலும், அந்த அளவு கலோரிகள் பாவிக்கப்பட்டு விடுவதனால் அவர்கள் பருமன் அடைவதில்லை. மெலிந்த தோற்றமும் பரம்பரையாக வரலாம்.

கப்பலில் உலகை வலம் வந்த இரண்டாவது மனிதன் இங்கிலாந்தின் சர். பிரான்ஸிஸ் டிரேக். ஆண்டு 1580.

1956 மே 18 ம் திகதி சுவிட்ஸர்லாந்தைச்சேர்ந்த எர்னஸ்ட் ரெய்ஸ் மற்றும் பிரிட்ஸ் லுச்ஸிங்கர் ஆகிய இருவரும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய இரண்டாவது குழு என்ற பெயரைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம்... சில முக்கிய செய்திகள்.

♥ மத்திய இந்தியாவில் உள்ள 'பில்ஸ்' எனும் பழங்குடி இனத்தவரில் கணவன் தனது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை மட்டுமே மனைவியை முத்தமிடலாம். அதுவும் திருமணத்தின் போதுதான்.

♥ 30 வெள்ளிக் காசுகளுக்காக இயேசுநாதரை காட்டிக் கொடுக்க யூதாஸ் பயன்படுத்தியது ஒரே ஒரு முத்தம்.

♥ 1896 ஏப்பிரல் மாதம் தோமஸ் அல்வா எடிசனால் திரையிடப்பட்ட 'THE KISS' எனும் திரைப்படத்தில்தான் முதன் முதலாக முத்தக்காட்சி ஒன்று இடம் பெற்றது.

♥ கிடரெல்லோ கிடாரெல்லி எனும் இத்தாலிய வீரனது சிலைக்கு இளம் பெண்கள் யாராவது முத்தமிட்டால் அழகிய ஆண்மகன் அவளைத்தேடி வருவான் என யாரோ கதையைக் கிளப்பிவிட சுமார் 50 இலட்சம் பெண்கள் அந்த வீரனது உதட்டை ஒரு வழி செய்துவிட்டனர். இத்தாலி நாட்டின் அந்த சிலைதான் உலகில் அதிக முத்தம் கொடுக்கப்பட்ட சிலையாக இருக்கும்!

♥ 1926 ம் ஆண்டு வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் தயாரித்த 'DON JUAN' எனும் திரைப்படத்தில் இடம் பெற்ற மொத்த முத்தங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமோ? 191 முத்தங்கள்!

♥ 1941 இல் வெளிவந்த 'YOU'RE IN THE ARMY NOW 'என்ற படத்தில் நடிகர் ரெஜிஸ்டூமீ நடிகை ஜேன் வைமனுக்கு கொடுத்த முத்தம் 3 நிமிடங்கள் 5 செக்கன்கள் வரை இடம்பெற்று ரசிகர்களை மூச்சுத்திணர வைத்தது. திரைப்பட வரலாற்றிலேயே நீண்ட நேரம் இடம் பெற்ற முத்தக்காட்சி இதுதான்.

♥ ரூத் வான் ஹெர்பென் எனும் பெண்மணி ஓவியக் கண்காட்சிக்கு போனால் சும்மா இருக்கக் கூடாதா? அங்கிருந்த ஒரு பழம் பெரும் ஓவியத்தின் அழகில் மயங்கி முத்தம் கொடுத்துவிட்டார்! ஓவியத்தில் பதிந்த உதட்டுச் சாயத்தை நீக்கி அந்த ஓவியத்தை புனரமைப்பு செய்வதற்கு இவர் கட்டிய அபராதத் தொகை 1300 டொலாகள். இது நடந்தது 1977 ல் இங்கிலாந்து நாட்டில்.

♥ 1990 செப்டெம்பர் 15ம் திகதி அமெரிக்கரான அல்பிரட் ஏ. வுல்ப்ராம் 8 மணித்தியாலங்களில் 8001 பேருக்கு முத்தம் கொடுத்து உலகசாத னையொன்றை ஏற்படுத்தினார்.

உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்திருக்கும் இரண்டாவது நகரம் திபெத்திலுள்ள லாசா. கடல் மட்டத்திலுருந்து 12,001 அடி உயரம்.

City Rounds

கா... க்கா

ஏன்னடா இது ! காலையில் இருந்து கொழும்பைச் சுற்றி ஒரு ரவுண்டு' அடித்தும்சரியான 'இரை' கிடைக்கவில்லையே..... இன்றைக்கு ஆசிரியரிடம் போய் முதுகில் 'டின்' கட்டவேண்டி வருமோ? சரி. இந்த மாலை நேரத்திலாவது ஏதாவது அகப்படாமல் போகாதா என்ன என்று' நினைத்துக்கொண்டே மருதானை சரசவிபாயவிற்கு முன்னால் நின்றிருந்த மரத்தில் அமர்ந்தேன்.

வழக்கமாக பகல் நேரங்களில் இந்த மரத்தடியில் வெற்றிலைவிற்கும் அந்த அம்மாவும் அவளுக்குத் துணையாக கறுத்த ஒரு பாடிகாட் தடியனும் இருப்பார்கள். அதனால் அவர்களிடமிருந்தாவது 'ஏதாவது' கிடைக்குமா என்று பார்த்தபோது..... அங்கே அந்த 'பாடிகாட்'டைக் காணவில்லை. வெற்றிலை அம்மா மட்டும் வெற்றிலைத் தட்டை துப்புரவு செய்துவிட்டு சில பெண்களோடு ஏதோ க்கதைத்துக்கொண்டிருந்தாள்.

நடுத்தர வயதுப்பெண்கள் இருவர்.....இளவயது சிட்டுக்கள் மூவர். முகத்திலே லைட்டாக பவுடர்பூசி, தலைவாரி இருந்த இளவயது பெண் ணிடம் வெ. அம்மா ஏதோ சொன்னது. மாலை நேர சந்தடியினால் எனக்கு கேட்கவில்லை.

கதைத்து முடிந்ததும் தெருவின் மறுபக்கம் உள்ள ஒரு தமிழரின் கடைக்குச் சென்ற சிட்டு வெற்றிலைச் சுருள் ஒன்றை வாங்கி, வாயை உதட்டுச் சாயம் பூசாமலேயே சிவப்பாக்கினாள்.

ஆகாயவிமானத்தில் பறந்த இரண்டாவது மனிதன் அமெரிக்காவின் வில்பர்ரைட். ஆண்டு 1903 டிசம்பர் 17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசவிபாய அருகில் நின்ற பொலிஸ்காரரும் அவருடன் நின்ற அந்த ஆசாமியும் அவளைப் பார்த்து சிரிக்க, அவர்களை நோக்கி நடந்தாள் அந்தப் பெண்..... நின்றாள்..... பொலிஸ்காரரிடம் ஏதோசொன்னாள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அறிவதற்காக சரசவிபாய வேலியை நோக்கிப் பறந்தேன் நான்.

"நீ இவரோட போ! காசு அதிகமா எடுக்க வேண்டாம். அதோட இவர நல்லா கவனிக்கணும். சரியா....? என்றார் பொலிஸ்காரர். பதிலுக்கு தலையை ஆட்டியவள், அந்த ஆசாமியை பின்தொடர்ந்து சென்றாள். நேரே மருதானை புகையிரதத்திணைக்கள வளவில் பழைய வீடொன்றினுள் நுழைந்தார்கள் இருவரும்.

நடக்கப்போவதை அறிந்ததும் அருவறுப்பு மேலிட அந்த இடத்தை விட்டுப் பறந்தேன். புகையிரத நிலையத்திற்கு முன் உள்ள பயணிகள் மேம்பாலத்திற்கு.

வெற்றிலையும் மாவுடன் கதைத்துக் கொண்டிருந்த இன்னுமொரு பெண் யாரோ ஓர் இளைஞனுடன் 'கொடுக்கல் வாங்கலில்' ஈடுபடுவது பாலத்திலிருந்து பார்க்க நன்றாகத் தெரிந்தது.... அதற்கு மேல் அங்கே நிற்பது சரியாக' படவில்லை. மனிதனின் இந்த 'பசி'க்கொடுமையை நினைத்துக்கொண்டே என்னால் பறக்கமுடிந்தது கொஞ்ச தூரம்தான்.

மருதானை தொழினுட்ப கல்லூரிக்கருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் ஒரு 'குடி' மகனுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையில் யுத்தம். யுத்தத்திற்கு காரணம் ஒரு சோற்றுப் பார்சல் என்றும் இருவரும் கணவன் மனைவி என்றும் தெரிந்து கொள்ள எனக்கு வெகு நேரமாகவில்லை.

காலையில் சென்றவன் மாலையில் ஒரு சோற்றுப் பார்சலுடன் குடிபோதையில் வீடு திரும்பி, அந்த சோற்றுப் பார்சலை மனைவிக்கோ பிள்ளைக்கோ கொடுக்காமல் சாப்பிட்டிருக்கிறான். பசி பொறுக்க மாட்டாதவளாய் மனைவி, பார்சலை பறித்ததே சண்டையின் சாராம்சம்.

சீ! நாங்கள் காக்கையானாலும் இப்படியான கீழ்த்தரமான வேலைகளை ஒரு நாளும் செய்வது கிடையாது. அந்த ஆள் மீது எனக்கேற்பட்ட கோபத்தை அவன் தலையில் எச்சமிட்டதன் மூலம் தெரிவித்துவிட்டு, கிடைத்த இரைகளுடன் கூட்டை நோக்கிப் பறந்தேன்.

காக்கையார்

அமெரிக்க டைரக்டர் ஸ்டீவன் ஸ்பீல்பர்கின் உன்னத படைப்பான 'ஜுராசிக் பார்க்' தயாரிக்கப்பட்டது என்னவோ 60 மில்லியன் டொலரில்தான். ஆனால் கிடைத்த வருமானமோ அமெரிக்காவில் மட்டும் 350 மில்லியன் டொலரையும் தாண்டிவிட்டது. உலகம் முழுவதுமிருந்து இதுவரை 540 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்திருக்கின்றது. வாழ்க டைனோசர்!

விண்வெளிக்கு சென்ற இரண்டாவது மனிதன் அமெரிக்காவின் அலன் B. ஷெபர்ட். ஆண்டு 1961 மே 5.



பல்லுப்போனால்...

✦ அழகான பற்கள் முக அழகை கூட்டிக்காட்டும். பல்லுக்கு முதல் எதிரி சர்க்கரை (சீனி) தான். பல் அழகாக இருக்க வேண்டுமானால் முதல் வேலையாக இனிப்பு பதார்த்தங்களை கைவிடுங்கள்.

✦ இறைச்சி, முட்டை, மீன் பயறுவகை, பாலாடை, கொழுப்பு முதலியவற்றை சாப்பிடலாம். இவை பல்லுக்கு மிக நல்லது. இவற்றில் சர்க்கரை சத்து அதிகமில்லை.

✦ பச்சை காய்கறிகளில் சர்க்கரையின் அளவு மிக குறைவு.

✦ பல் நோய்களுக்கான பக்டீரியாக்கள் சர்க்கரையிலிருந்துதான் உருவாகின்றன. இதிலிருந்து உருவாகும் அமிலமே பற்களை அசிங்கப்படுத்துகின்றது.

✦ சாப்பிட்டு முடிந்ததும் வாயை நன்றாக கழுவுங்கள். அத்தோடு பற்களுக்கிடையேயுள்ள உணவுத்துகள்களையும் அப்புறத்த வேண்டும்.

✦ தினமும் இருவேளை 'பிரஷ்' மூலம் பற்களை துலக்குங்கள். ஒரு பிரஷை ஒரு மாதத்துக்கு மேல் பயன்படுத்தாதீர்கள். பிறகென்ன உங்கள் பற்கள் 'பளிச்' 'பளிச்' தான்.

தொகுப்பு - S.P. ஹரன்



பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஒரு திருவிழாவிலே ஒரே கயிற்றில், 'ஸ்கை பிரேக்கர்ஸ் க்ளப்' பைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக தலைகீழாய்த்தொங்கி புதிய உலக சாதனையொன்றை ஏற்படுத்தி விட்டார்கள்.

விண்வெளிக்கு சென்ற இரண்டாவது பெண் என்ற பெருமையைப் பெறுபவர் ரஷ்யாவின் 'ஸ்வெட்லானா சவிஸ்காயா'. ஆண்டு 1982 ஆகஸ்ட் 19.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலா தேய்கிறாள்! அவரைப் தூர்யா!!

புதிய காதல் தொடர்

பெரிய உருவத்துடன் கூடிய நான்கு பேர் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்களது கைகளில் ரைபிள்கள் மற்றும் இன்னோரன்ன ஆயுதங்கள் பக்கத்தில் டாங்கிகள், மேலே யுத்தவிமானங்கள். ஐந்தாவதாக ஒருவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவரது முகத்தில் மட்டும்தான் சாதாரண பார்வை. மற்றைய நால்வரின் முகங்களிலும் என்னவென்று கூறமுடியாதவாறு உணர்ச்சிகள் அலைக்கலைத்துக் கொண்டிருந்தன. அவர்களது பார்வையில் ஒரு கொடூரத்தன்மை இருந்தது. இராணுவத்தினரின் சீருடை போன்ற காற்சட்டைகளை அவர்கள் அணிந்திருந்தனர். ஆனால் அர்களது மேற்சட்டைகளில் பல்வேறு நாட்டுக் கொடிகள் இடம் பெற்றிருந்தன. மேற்படி ஐவரும் ஐந்து கண்டங்களை குறிப்பவர்கள். அந்தந்த கண்டங்களில் உள்ள நாடுகள் தான் அவர்களது மேற்சட்டையாக இருந்தது.



'கார்த்தக்'

1969 ஜூலை 21ஆம் திகதி அமெரிக்காவின் எட்வின் அல்ட்றின் சந்திரனில் இறங்கிய இரண்டாவது மனிதன் என்னும் பெயரைப் பெற்றார்.

இது ஒரு புறம், மறு புறத்தில்... பல்வேறு நாடுகளின் சிறுவர்கள் ஒரு பறவைக்கூட்டை கைகளில் தாங்கி நிற்கின்றனர். அக் கூட்டில் வெள்ளை நிற புறாக் குஞ்சுகள்.

இவர்கள் எல்லோருக்கும் மேலாக வெள்ளை நிறம் கொண்ட பெரிய புறா ஒன்று புறக்கிறது. அதன் வாயில் ஒலிவ் இலைகளுடன் ஒரு அட்டை. அந்த அட்டையில்

PEACE

❋❋❋❋

தூக்கத்தில் இருந்து விழித்தாள் நிலா...தூரத்தில் முருகன்கோவில் மணியோசை ஒலித்தது. கண்களை மூடி கைகளை குவித்து மனதில் அம்மனை தியானித்தாள். அதன் பிறகு மெல்ல கண்களை திறந்தாள்.

கனவில்தோன்றிய அக்காட்சி புகைப்படம் போல அவள் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது. அக்காட்சியில் இருந்த வண்ணங்கள் கூட அவள் மனதில் பசுமையாக பதிந்திருந்தன.

அன்றைய தினம் நடக்கப் போகும் 'உலக சமாதானம்' என்ற தலைப்பிலான சுவர் ஓவியப் போட்டிக்கு எவ்வளவு பொருத்தமான ஓவியம்.

Subject கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் படுக்கையில் இருந்து எழுந்தாள்.

காலை ஐந்தரை மணிக்கெல்லாம் எப்போதும் எழுந்து விடுவாள் நிலா... எழுந்ததும் ஒரு கப் கூஜா நீர் அருந்தினாள் (உபயம்:- சுகாதார டீச்சர்)

உலக கிண்ண கால்பந்தாட்டத்தில் வெற்றியீட்டிய இரண்டாவது நாடு இத்தாலி. ஆண்டு 1934.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையை சரி செய்து போர்வையை அழகாக மடித்து வைத்தாள் (உபயம்: ஹோம் சயன்ஸ் டீச்சர்) வானொலியை முடுக்கிவிட டாள். அழகாக ஒலித்த அம்மன் பாடலை சுசீலாவுடன் சேர்ந்து பாடினாள். சுசீலாவைப் போலவே நிலாவுக்கும் நல்ல குரல்வளம் (உபயம்: சங்கீத டீச்சர்) நேராக நின்று கைகளை மேலே உயர்த்தினாள். கைகளை முன்னால் வளைத்து நிலத்தை தொட்டாள். கால்களை விரித்து வைத்து கைகளை பக்கவாட்டில் இறக்கி கால்களை மாறி மாறித் தொட்டாள். இடுப்பை வளைத்து ஏதேதோ Exercise களை செய்து முடித்தாள். (உபயம்: P.T. டீச்சர்)

அடுத்து பாத்ரூம் சென்று பற்களைத் துலக்க மட்டும் பத்துநிமிடம் செலவிட்டாள். (உபயம்: ஹெல்த் சயன்ஸ் டீச்சர்) அதன் பின் குளித்து தலைவாரி இரட்டை பின்னல் போட்டுக்கொண்டு 'யுனிபோர்மை' யும் உடுத்தி அவள் சாப்பாட்டு மேசையில் வந்தமர்ந்த போது வானொலியில் 'என்றும் இனியவை' மலர்ந்தன.

காலைச்சாப்பாட்டை நிலா எப்போதுமே மிஸ் பண்ணுவதில்லை. (உபயம்:ஹெல்த் சயன்ஸ் டீச்சர்)

காலை சாப்பாட்டுக்காக அம்மா தோசை சுட்டு வைத்திருந்தாள். சட்டினியில் தோய்த்து இரண்டு தோசைகளை அம்மா ஊட்டி விட்டாள். தானாகச் சாப்பிட்ட இரண்டு தோசைகளை விட அம்மா ஊட்டிவிட்ட தோசைகள் அதிகமாக ருசித்தன. தோசையுடன் அம்மாவின் பாசமும் அல்லவா அதில் கலந்திருந்தது. அதனால் தானோ என்னவோ அதற்கு தனி ருசி.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு கை அலம்பியபோது வெளியே 'ஹார்ன்' ஒலி கேட்டது. 'ஸ்கூல் வேன்' இன்று சில நிமிடங்கள் நேரத்துடனேயே வந்து விட்டது. தயாராக வைத்திருந்த ஸ்கூல் பேக்கை கையில் எடுத்தவாறு விநாயகருக்கு துதியும், அம்மாவுக்கு டாட்டாவும் காட்டியபின் வெளியே ஓடி வானில் ஏறிக்கொண்டாள்.

உயர் வகுப்பு மாணவிகளுக் கென்றே ஒதுக்கப்பட்டிருந்த பின்சீட்டில் சிநேகா அடுத்தசீட்டை நிலாவுக்கென்றே காலியாக வைத்திருந்தாள். தனது 'கனவும் காட்சியும்" படலத்தை அப்படியே சிநேகாவிடம் ஒப்படைக்கத் தொடங்கினாள் நிலா...

தொடரும்

உலகை இணைக்கும் உதைபந்தாட்டம்.

பெரும்பாலான உலக நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் அமைப்பு எது? ஐக்கிய நாடுகள் சபையா? இல்லை. 'FIFA' எனப்படும் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம்தான். இந்த அமைப்பில் தற்போதைய நிலவரப்படி 191 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 184.

உலக கிண்ண கிரிக்கட்டில் வெற்றியீட்டிய இரண்டாவது நாடு மேற்கிந்தியத்தீவுகள். ஆண்டு 1979.

1994 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இம்முறை நோபல் பரிசின் பெறுமதி 950,000 அமெரிக்க டொலர்களாகும். அதாவது நம் நாட்டுப் பெறுமதியின் படி கிட்டத்தட்ட 4 கோடியே 75 இலட்சம் ரூபா, பரிசு பெறுபவருக்கு கிடைக்கும். இவ் வாண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ராபின், இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் ஷிமோன் பெரஸ் பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யசர் அரஃபாத் ஆகிய மூவருக்கும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

வளர்ந்து வரும் எழுத்தாளர்களே! உங்களுக்கு ஒரு வாய்ப்பு! அடுத்த இதழிலிருந்து தயாராக இருங்கள்!

தூக்கம் வந்துவிட்டால் தலையணை தேவையில்லை. காதல் வந்துவிட்டால் அழகே தேவையில்லை.
–ஆப்கானிஸ்தான் பழமொழி

மின்மினி சந்தா விபரம்

பெயர்	முகவரி	சந்தா
1. V.K.கிருஷ்ணன்	25/3 C.W.W கன்னங்கர மாவத்தை, கொழும்பு –7.	ஒரு வருடம்
2. K. ரமணி	92/14 வைத்தியா வீதி, தெஹிவளை.	ஒரு வருடம்
3. S.மோகனா	38, பொசன் வத்த லேன், கொழும்பு – 15.	ஒரு வருடம்
4. M.நியுமன் டயஸ்	533/21 எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டிய.	ஒரு வருடம்
5. R.கமல்	1172/18 மயூரா மாவத்தை, தலுபிட்டிய உனுபிட்டிய, வத்தளை.	ஒரு வருடம்

'மின்மினி'க்கு சந்தாதாரராக விரும்புவோர் உங்கள் தபாற்கட்டளைகளை The Editor, 'MINMINI' என்ற பெயருக்கு KOTAHENA P.O. இல் மாற்றக்கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

'மின்மினி' 72/1, பிக்கரிங்ஸ் வீதி, கொழும்பு –13.

ஒருவருடம் – 115.00

ஆறுமாதம் – 60.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான காதல்

நீ விஞ்ஞான மாணவிதான்
ஏற்றுக்கொள்கிறேன்
அதற்காக
இதயத்தில் நான்கு அறை
என்பதனால்
நீ நால்வரை காதலிப்பது
நியாயமா? முரளி

முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் ஒரு 'டும்' உயர்ந்த மினராக்கள் என்ற அமைப்பிலே பொதுவாக காணப்படும். ஆனால் சீன தேசத்தில் தங்கள் பாரம்பரிய கலாசார முறையையொட்டி மரத்தினாலும், சீமை ஓடுகளினாலும் பௌத்த ஆலயங்களைப்போல் கடந்த காலங்களில் கட்டிய பள்ளிவாசலினை சீன முஸ்லிம்கள் பாதுகாத்து வருகின்றார்கள். படத்தில் காணப்படும் இவை போன்ற பள்ளிவாசல்கள் சீன தேசத்தின் பல பாகங்களில் காணப்படுகின்றன. ஆயினும் இப்போது சீனாவில் கட்டப்படுகின்ற பள்ளிவாசல்கள் 'மினரா டும்' முறையில் தான் உள்ளன. படத்தில் இருப்பது சீனாவின் தலைநகரமான பீஜிங்கில் உள்ள NEIVJIE (நியூஜி) புராதன சீனப்பள்ளிவாசலாகும்.

எம். மசூத் அஹமத் ,காத்தான்குடி-03



கொகா கோலா கம்பனியினரும் பெப்சிகோலா கம்பனியினரும் மார்க்கெட்டை பிடிப்பதற்காக என்னென்னவோ உத்திகளை போட்டிபோட்டுக்கொண்டு கையாண்டு வருகின்றார்கள். பெப்சி,மிரிண்டா, 7-அப் பானங்களை விநியோகிக்கும் மகாராஜா நிறுவனத்தார் 'பம' போத்தல்களை ரூ. 5 பெறுமதியில் சந்தைக்கு விட்டு சந்தையை பிடிக்க முயற்சி செய்தார்கள். இப்போது 1 1/2 லீட்டர் போத்தல்களை சந்தைக்கு அறிமுகம் செய்திருக்கின்றார்கள். இவற்றின் விலை பிளாஸ்டிக்கிலான போத்தலுடன் சேர்த்து ரூ.23 தான். இதைக்கண்டு கொகா கோலா லீட்டர் போத்தலும் ரூ. 20 க்கு இறங்கியிருக்கின்றது. ஏதோ, மக்களுக்கு இலாபமாக இருந்தால் சரி!

'மின்மினி' சார்பாக கொழும்பு 13 ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, 253/ A ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளLAXU GRAPHICS இல் அச்சிட்டு வெளியிடுபவர் ப. விக்னேஷ்வரன் ஆக்கங்களை சுருக்கவும் திருத்தியமைக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சகல விதமான மருந்துவகைகளுக்கும் நாடுங்கள்!

MULTI NEEDS
PHARMACY.
36 A, Galle Road,
Colombo 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SYSTEMATICS

Computer Training

Course	Duration	Fee
DBase III plus	8 Weeks	3,500
Lotus 123	6 Weeks	3,500
Word processing	4 Weeks	3,000
Job Training	6 Weeks	12,500
Mastering Computer	8 Weeks	4,000

- ஆங்கிலம், தமிழ், சிங்கள, மொழிகளில் விரிவுரைகள், செயல் முறை விளக்கங்கள் அளிக்கப்படும்.
- கொம்பியூட்டர் துறையில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்க ளால் வகுப்புகள் நடத்தப்படும்.
- சிறந்த மாணவர்களுக்கு மூன்றுமாத காலம் இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

SYSTEMATICS

No.50, 3rd floor,
Colombo Plaza, Wellawatta,
Colombo - 06.
T.P.591937

Advino

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org